**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.33/2025**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.09.2025** |
| **பெயர்** | **C.செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 4.00 p.m**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. வழக்கு சொத்திற்கு யார் உரிமையாளர் என்றால் ஜாமல் அப்துல்சலாம். அவர் இறந்த பிறகு அவரின் வாரிசுகளுக்கு உரிமை. அவர் எப்பொழுது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. ஜாமல் அப்துல்சலாம் வாரிசுகள் யார் என்றால் அவரின் மனைவியான லைலா சலாம், மூன்று மகன்கள் மற்றும் ஒரு மகள். வழக்கு சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளோம். கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் நடந்தது என்று நினைவில் இல்லை. ஜாமல் அப்துல்சலாம் மனைவி மற்றும் மக்கள் தான் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார்கள். கிரைய ஒப்பந்தம் என்னிடம் தான் உள்ளது. அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்,

4. கிரைய ஒப்பந்ததத்திற்கு முன்பணம் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். எவ்வளவு தொகை என்றால் பல்வேறு தேதிகளில் தவணை முறையில் 30 ல் இருந்து 40 லட்சம் வரை அளித்துள்ளேன்.

கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய போது முன்பணமாக எவ்வளவு அளித்தேன் என்றால் சுமார் ரூபாய் 10 லட்சம் கொடுத்துள்ளேன். அந்த ஒப்பந்தத்தில் அன்றைய தேதியில் எவ்வளவு ரூபாய் முன்பணமாக கொடுக்கபட்டுள்ள விவரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த தொகையை ரொக்கமாகவும், காசோலையாகவும் கொடுத்துள்ளேன். எவ்வளவு தொகை ரொக்கம் மற்றும் எவ்வளவு தொகை காசோலை என்று எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகை ரொக்கம் மற்றும் எவ்வளவு தொகை காசோலை என்று மேலே சொன்ன ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது.

5. அதன்பிறகு எத்தனை முறை பணம் கொடுத்துள்ளீர்கள் என்றால் நான்கில் இருந்து ஐந்து தவணைகள் கிரையத்திற்கு முன்பாக கொடுத்துள்ளேன். கிரைய ஒப்பந்தம் எவ்வளவு கிரைய தொகைக்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் ரூபாய் 90,00,000/- அதை முன்பணம் கொடுத்த பிறகு நான் சில தவணைகளில் மேற்கொண்டு கிரைய ஒப்பந்தத்திற்காக பணம் கொடுத்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகும் நான்கு ஐந்து தவணைகளில் பணம் செலுத்தியுள்ளேன். ஒவ்வொரு தவணையிலும் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்று நினைவில் இருக்கிறதா என்றால் நினைவில் இல்லை. ஒவ்வொரு முறையும் ரொக்கமாக கொடுத்தேனா அல்லது காசோலையாக கொடுத்தேனா என்றால் சுமார் மூன்று முறைகள் ரொக்கமாக கொடுத்துள்ளேன் ஒரு முறை காசோலையாக கொடுத்துள்ளேன். அந்த தொகையின் விவரங்கள் தற்போது எனக்கு நினைவில் இல்லை.

6. சாதரணமாக பணத்தை கொடுக்கும் பொழுது அதை எழுதி வைத்துக்கொண்டு தான் கொடுப்போம் என்றும் அவ்வாறு தான் நானும் மேல் குறிப்பு எழுதி கையெழுத்து பெற்ற பிறகு தான் பணத்தை

கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்கூறிய கிரைய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை வெளிவரும் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை எப்பொழுது கேட்டாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் வருமான வரிக்கு கொடுத்துள்ளேன் தேவைப்பட்டால் அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்ய இயலும்.

7. கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள பகுதி தொகையை தவிர மீதி தொகையத்தான் ரொக்கமாக கொடுத்து கிரைய பத்திரம் எழுதி கொண்டோம். நான் பதிவு செய்துள்ள கிரைய பத்திரத்திற்கான ஆதாரம் மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் தான் ஆகும்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 4.20 a.m.**